மதிப்பும் மரியாதையும்

உலகில் உள்ள ஒவ்வொரு ஜீவராசிகளின் முடிவான ஒரே இலக்கு சுகம். இதனை அனுபவிப்பதற்கும் இதற்கு நேர் எதிரிடையான துக்கம் என்பது நம்மை அனுகாமல் தடுப்பதற்குமே நாம் ஒவ்வொருவரும் போராடி கொண்டிருக்கிறோம். இதில் வெற்றி பெறும் சரியான வழியை நமது அறிவாற்றலால் மட்டுமே கண்டு கொள்ள முடியும். இதன்படி முதலில் துக்கம் நம்மை அனுகாமல் இருக்கும் வழியை ஆராயவேண்டும். அவ்வாறு ஆராய்ந்தால் மனிதனுக்கு பல்வேறு வழிகளில் துக்கங்கள் வருகின்றது என்றபோதிலும் மிகப் பிரதானமாக அல்லது மிகவும் சுலபமாக எந்நேரமும் மனிதனின் துக்கத்திற்கு காரணமாக இருப்பது மானம் இழத்தல், மதிப்பு குறைதல் என்று கூறுலாம். எனவே இது குறித்து ஓர் விரிவான ஆராய்ச்சியை மேற்கொள்வோம்.

ராம், ராஜா இருவரும் நண்பர்கள்

| | | |
|---|---|---|
| ராஜா | : | ராம்! ராம்'! ஓர் மகிழ்ச்சியான செய்தி. |
| ராம் | : | சொல் |
| ராஜா | : | என்னை ஒரு சிறந்த தொழிலதிபராக தேர்தெடுத்து உள்ளதாகவும், பலபேர் முன்னிலையில் எனக்கு பதக்கம் அளிக்க போவதாகவும் கடிதம் வந்துள்ளது. இந்த மகிழ்ச்சியை தெரிவிக்கவே வந்தேன் |
| ராம் | : | இதில் மகிழ்வதற்கு என்ன இருக்கிறது. |
| ராஜா | : | (கோபமாக) ஒவ்வொருவரின் வாழ்விலும் மிக உயர்ந்த மகிழ்ச்சியாக ஒன்று இருக்கிறது என்றால் அது இது ஒன்றே. ஒவ்வொருவரும கோடிக்கணக்கான பணம் ஈட்டுவதற்காக, உணவு உறக்கம் பெண் இன்பம் என முக்கியமாக கருதப்படும் சுகத்தையே தியாகம் செய்கிறார்கள் என்றால் நான்கு பேர் மதிக்க வாழும் வாழ்வு தான் மகிழ்ச்சி என்ற ஒரே காரணத்திற்காகத்தான். இது உனக்கு தெரியாதா ? மேலும் இன்று எனக்கு பதக்கம் தருவதற்கு காரணமே நான் தொழில் நன்றாக செய்து அதிகமாக பணம் ஈட்டியதால் தான். |
| ராம் | : | நான்கு பேர் மதிக்க வாழ்ந்தால் தான் வாழ்வு மற்றும் மகிழ்ச்சி என கூறினாய். ஆனால் உன்னை மதிக்க வேண்டும் என விரும்புகிறாயா ? அல்லது உனது உடமையை மதிக்க வேண்டும் என விரும்புகிறாயா ? என கூறவில்லை. |
| ராஜா | : | என்னை மதித்தால் என்ன ? என் உடமைகளை மதித்தால் என்ன ? |
| ராம் | : | உனது உடமைகளை மதித்தால் உன்னை மதித்தாகுமா ? உதாரணமாக, ஒருவன் உண்மையில் நேர்மை இல்லாதவனாக இருந்து கொண்டு வெளியில் செல்லும் போதெல்லாம் நேர்மையான ஒருவருடன் கூடவே |

| | | |
|---|---|---|
| | | சென்றான். ஏன் இப்படி செய்கிறாய் என கேட்டதற்கு, இவருடன் நான் இருந்தால் தான் என்னை எல்லோரும் மதிக்கிறார்கள். இல்லையேல் வெறுக்கிறார்கள் என்றான். இப்போதும் கூட எல்லேரும் நேர்மையான வரை தானே மதிக்கிறார்கள் என கேட்டால், அவர் பொருட்டாக என்னையும்தான் மதிக்கிறார்களே என்றான். நீ கூறியதும் இப்படித்தான் இருக்கிறது. அமலும் இதையே ஞானதேவர் என்கின்ற ஞானி இப்படித்தான் இருக்கிறது. அதாவது பணத்தை சாக்காக வைத்து என்னையும் தான் மதிக்கிறார்களே என்கிறாய். மேலும் ஞானதேவர் என்ற ஞானி இதையே மிக அழகாக கீழ்வரும் உதாரணம் மூலம் விளக்கிறார்.<br>மக்களுக்கு என் மேல் எத்தனை மதிப்பு தெரியுமா ? ஏனெனில் ஒரு நாளும் தவறாமல் என்னை வந்து பார்க்கிறார்கள். என்னை அழகாக சுத்தம் செய்து வைக்கிறார்கள் என்று ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி பெருமிதம்பட்டு கொண்டால் எவ்வளவு மடத்தனமோ ? அதே போன்று தான் தன்னிடம் பணம் இருக்கிறது. ஆதலால் எல்லோரும் தன்னை மதிக்கிறார்கள் என்று பெருமைபட்டு கொள்வது என்று ஞானத்தேவர் கூறுகிறார். அதாவது நாம் ஒவ்வொருவரும் நமது சுயநலத்திற்காகவே கண்ணாடி பார்க்கிறோம், சுத்தம் செய்கிறோமே தவிர கண்ணாடியின் நலனில் நமக்கு எந்த மதிப்பும் மரியாதையும் இல்லாதது போல் என்று வர்ணிக்கிறார். |
| ராஜா | : | நீ கூறுவது போல் பணத்தின் பொருட்டு என்னை சிலர் மதித்தாலும் அனைவரும் என்னையே மதிக்கவேண்டும் என கருதியே நான் ஈட்டிய பணத்தில் ஒரு பகுதியை வைத்து, அன்ன சத்திரம் கட்டி உள்ளேன், ஏழைகளுக்கு இலவச கல்வி மற்றும் மருத்துவ வசதி ஆகியவை செய்து வருகிறேன். இதன் காரணமாக பலரும் என்னையே மதிக்கிறார்கள். குறிப்பாக என்னால் பலனடைவோர் என்னை ஓர் இறைவனாகவே பார்க்கிறார்கள். இது எனக்கு உண்மையான மகிழ்ச்சியை கொடுக்கிறது. |
| ராம் | : | சரி, நீ தெருவில் செல்லும்போது ஒரு நாய் உன்னை பார்த்து குறைத்தால், அதை நீ அவமானமாக கருதி, அந்த நாயிடம் மதிப்பு பெற முயற்சிப்பாயா ? |
| ராஜா | : | அவமானமாக கருத மாட்டேன். மேலும் பகுத்தறிவே இல்லாத ஒரு நாயின் மதிப்பு எனக்கு தேவையே இல்லை. ஒருவேளை நான் நாயிடம் மதிப்பு பெற முயற்சிசெய்தால், முயற்சிதான் வீண்படும். |
| ராம் | : | சரி, சட்டைகளை கிழித்துக் கொண்டு தெருவில் செல்லும் ஓர் பைத்திகார மனிதன் தல்லது 3 வயது குழந்தை உன்னை பார்த்து புகழ்ந்தால் மகிழ்வாயா ? |
| ராஜா | : | அவர்கள் மனிதர்கள் என்றாலும் அறிவில்லாததால் அவர்கள் என்னை புகழ்வதாலோ அல்லது இகழ்வதாலோ அதை நான் மரியாதையாகவே அல்லது அவமரியாதையாகவோ கருதமாட்டடேன். |
| ராம் | : | நீ கூறியதிலிருந்து உன்னைவிட அறிவிலும் திறமையிலும் கீழ்நிலையில் உள்ளவர்களில் (நாய், பைத்தியம்) மதிப்பில் உனக்கு அக்கறை இல்லை என்று தெரிகிறது. |
| ராஜா | : | ஆமாம. |

| | | |
|---|---|---|
| | | |
| ராம் | : | சரி, உன்னைவிட அறிவிலும் திறமையிலும் கீழ்நிலையில் உள்ளவர்களுக்கு நீ மதிப்பு மரியாதை செலுத்துவாயா ? |
| ராஜா | : | என்னைவிட அறிவிலும் திறமையிலும் உயர்ந்தவர்களுக்குத்தான் நான் மரியாதை செலுத்துவேன். யாராக இருந்தாலும் எந்த விசயமானாலும் தன்னைவிட திறமையானவர்களை காணும்போது தான் மதிப்பு மரியாதை ஏற்படும். தன்னைவிட திறமையில் குறைந்தவர்களிடம் மதிப்பு மரியாதை ஏற்படாது. |
| ராம் | : | நீ ஏழைகளுக்கு உதவுவதாக கூறினாயே ? அவர்கள் உன்னைவிட அறிவிலும் திறமையிலும் கீழ்நிலையில் உள்ளவர்களா ? மேல்நிலையில் உள்ளவர்களா ? |
| ராஜா | : | கீழ்நிலையில் உள்ளதால்தான் என் உதவியை பெற்று வாழ்கிறார்கள். |
| ராம் | : | சற்று முன்னர் உன்னை மக்கள் தெய்வமாக பார்க்கிறார்கள், மதிக்கிறார்கள் ஆதலால் எனக்கு மகிழ்ச்சி என்று கூறினாய், மேலும் உன்னைவிட கீழ்நிலையில் உள்ளவர்களின் மதிப்பில் உனக்கு அக்கறை இல்லை என்றும் அதனால் எனக்கு மகிழ்ச்சி ஏற்படாது என்றும் கூறினாய். பின் உனக்கு மகிழ்ச்சி எப்படி ஏற்பட்டது ? |
| ராஜா | : | அது வந்து . . . (மிகவும் யோசித்து விட்டு) அதாவது என்னைவிட கீழ்நிலையில் உள்ளவர்களுக்கு நான் செய்யும் உதவியை பார்த்து என்னைவிட மேல்நிலையில் உள்ளவர்கள் என்ன மதிப்பார்க்ள் என்று நினைத்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். |
| ராம் | : | நீ எவர்களானாலும் தங்களைவிட திறமையில் கீழ்நிலையில் உள்ளவர்களிடம் மதிப்பு மரியாதை ஏறபடாது என்று சற்று முன்னர் என்னிடம் நீயே கூறினாய். ஆனால் இப்போது எவ்வாறு உன்னை விட திறமையில் மேல்நிலையில் உள்ளவர்கள் அவர்களை விட கீழ்நிலையில் இருக்கும் உன்னை மட்டும் மதிப்பார்கள் என்று நினைக்கிறாய் ? |
| ராஜா | : | குழப்பமாக இருக்கிறதே (சிறிது நேரம் யோசித்து விட்டு) எனக்கு சமநிலையில் உள்ளவர்கள் என்னை மதிக்கிறார்களே. அது மகிழ்ச்சிதானே! |
| ராம் | : | நீ எந்த நிலையில் இருந்தாலும், அதாவது பிச்சை எடுக்கும் நிலையில் இருந்தாலும் அப்போதும் உனக்கு சமமாக பிச்சை எடுக்கும் நிலையில் சிலர் இருப்பார்கள். அவர்கள் உன்னை மதிக்கத்தான் போகிறார்கள். எனவே சமமானவர்களின் மதிப்பிற்காக நீ எந்த கஷ்டமும் பட வேண்டியதில்லையே. |
| ராஜா | : | மௌனமாகிறார். |
| ராம் | : | மதிப்பு, மரியாதை, கௌரவம் என்ற பெயரில் மகிழ்ச்சியாக வாழந்துவிடலாம். என கற்பனை செய்து கொண்டு வாழ்கிறாய். ஆனால் உண்மையில் உன்னுடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று நான் கூறுகிறேன். கேள். பணம் ஈட்டுகிறேன் என்று கஷ்டப்படுவதற்கே உன் நேரம் |

| | | |
|---|---|---|
| | | முழுவதும் செலவிட்டாய். மேற்க்கண்ட நம் உரையாடலின் உண்மையை உள்ளவாறு அறியாமல், உன்னைவிட திறமை மற்றும் அறிவில் மேல்நிலையில் உள்ளவர்களிடம் மதிப்பை பெறுவதற்காக, டம்பம் (இல்லாததை .இருப்பதாக காட்டிக் கொள்வது) தற்பெருமை என்ற ஆயுதத்தை கையில் எடுத்தாய். அதன் விளைவாக பல பொய்கள் பேச ஆரம்பித்தாய். நீ கூறும் பொய்களை நம்ம வைத்து மதிப்பை பெற்றுவிடலாம் என்று எண்ணி கொண்டிருக்கும் அதே வேளையில், எங்கே உண்மை தெரிந்துவிடுமோ ? உள்ள மதிப்பும் போய்விடுமோ ? என்ற கவலையில் உன் வாழ்வை ரணகலமாக்கிக் கொண்டாய். மேலும் நீ ஒரு கஞ்சனாக இருந்து கொண்டு மதிப்பு என்ற போர்வையில் சேவைக்காக பணம் செலவழிக்க வேண்டி வருகிறதே என்று மகிழவேண்டிய விசயத்திலும் வருந்துகிறாய், முற்றிலும் துக்கத்தை கொண்டுக்கும் அகந்தை (நானே பெரியாள் என்ற எண்ணம்) சுமந்து கொண்டு, சூழ்நிலைகளால் நீ சிறியவன் ஆகும்போதெல்லாம் அல்லல் படுகின்றாய், உன்னை மதித்து உன் நலத்தை விரும்பும் உன்னுடைய நண்பர் மற்றும் உறவினர்களையே நீ போட்டி மனப்பான்மை கொண்டு பார்ப்பதால், இந்த சுகத்தையும் இழக்கிறாய். ((ஏனெனில் பொதுவாக பலரும் தங்களது சுற்றத்தாரை தான் போட்டியாளராக பார்பார்களே தவிர தனக்கு அறிமுக இல்லாத எவரையும் போட்டியாக கொள்வதில்லை). மதிப்பு என்ற போர்வையில், உன் மகன் இந்த பள்ளியில் தான் படிக்க வேண்டும், விலை உயர்ந்த ஆடைகளையே அணிய வேண்டும், விலை உயர்ந்த காரில் தான் போக வேண்டும் என்று உன் தகுதியை முற்றிலும் மறந்து உனக்கு நீயே எதிரியாக இந்த செயல்கள் செய்வதால், பின்பு பற்றாக்குறையால் அழுகிறாய். இவ்வாறு மதிப்பு, மரியாதை என்ற போர்வையில் நீ படும் துக்கங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். சற்று ஆழமாக சிந்தித்துவிட்டு இதுவரை நான் கூறியது உண்மையா ? இல்லையா ? எனக் கூறு. |
| ராஜா | : | (சிறிது நேரம் சிந்தித்து விட்டு)<br>உண்மைதான். இந்த சமுதாயத்தில் எல்லோருமே என்னைப்போல் தானே வாழ்கிறார்கள். ஆதலால் நானும் அப்படித்தானே வாழ்ந்தாக வேண்டும். |
| ராம் | : | சமுதாயத்தில் எல்லோரும் உன்னைப்போல் தான் வாழ்கிறார்க்ள் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். அது சரியா ? தவறா ? அல்லது அது அறிவா ? அறிவீனமா ? |
| ராஜா | : | அறிவாற்றலோடு, சிந்தித்து பார்த்தால், நீ கூறியது போல், நம்மைவிட கீழ்நிலையில் உள்ளவர்களின் மதிப்பை நாம் எதிர்பார்பதில்லை, நம்மைவிட மேல்நிலையில் உள்ளவர்கள் நமக்கு மரியாதை தரப்போவதும் இல்லை. சமநிலையில் உள்ளவர்கள் நாம் எந்நிலையில் இருந்தாலும் மதிக்கத்தான் போகிறார்கள். ஆதலால் அதற்காக நாம் எதுவும செய்யத் தேவையும் இல்லை. இவ்வாறு முற்றிலும் சாத்தியமே இல்லாத ஓர் மதிப்ப மரியாதை விஷயத்திற்கு ஆசைப்பட்டு அதற்காக நீ கூறியது போல் எத்தனை துன்பங்களை அனுபவிக்க வேண்டி உள்ளதால் கண்டிப்பாக தவறுதான் என்றாலும் எனக்கு ஒரு சந்தேகம். ஏன் ? எல்லோரும் இப்படியே இருக்கிறார்கள். |
| ராம் | : | எல்லோரும் அப்படி இருப்பதில்லை . உதாரணமாக, ஓர் பைத்தியக்கார ஆஸ்பத்திரி வளாகத்திற்கு உள்ளே இருக்கும் எல்லா பைத்தியர்களுமே |

| | | |
|---|---|---|
| | | தவறான அறிவீனமாக செயலே செய்து கொண்டிருப்பார்கள். அவர்களில் ஒருவர் பைத்தியம் தெளிந்தால், அவருக்கும் உன்னை போல் ஏன் எல்லோரும் இப்படி இருக்கிறார்கள் என ஆச்சர்யமாகத்தான் இருக்கும். ஆனால் ஆஸ்பத்திரி வளாகத்துக்கு வெளியே வந்து பார்த்தால் மதிப்பு, மரியாதை என்ற போலியான வாழ்க்கையை விட்டுவிட்டு (சித்தர்கள், ஞானிகள் யோகிகள், போன்றவர்கள்) எத்துன்பத்தையும் அனுபவிக்காமல் தங்களது அறிவாற்றலால் எவ்வளவு பேர் ஆனந்தமாக வாழ்கிறார்கள் என்று தெரியும். மேலும் பைத்தியம் தெளியாத நிலையில் ஆஸ்பத்திரி வளாகத்திற்குள் இருப்பது ஒரு பொருட்டல்ல. ஆனால் தெளிந்தவர்கள் உடனே அக் கூட்டத்தை விட்டு விலகி விடுவார்கள். |
| ராஜா | : | அப்படியெனில் நான் வாழும் இந்த சமுகம் முழுவதையுமே பைத்தியம் என்று கூறுகிறாய். யோசித்துப் பார்த்தால் நீ கூறுவது சரி என்று தோன்றினாலும் என் மனம் என்னவோ இதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. |
| ராம் | : | சரி, அப்படியெனில் உன் மனதை பற்றி தெரிந்து கொள்வதற்காக சில கேள்விகள் கேட்டால் பதில் அளிப்பாயா ? |
| ராஜா | : | கண்டிப்பாக பதில் அளிக்கிறேன். |
| ராம் | : | உன் உடல் நலன்கருதி சில உணவு கட்டுப்பாடுகளை உனது மருத்துவர் விதிக்கிறார். அதை சரிவர கடைப்பிடிக்கிறாயா ? |
| ராஜா | : | இல்லை. |
| ராம் | : | ஏன் ? |
| ராஜா | : | சில நேரங்களில் என் மனம் தவிர்க்க வேண்டிய உணவிற்கு சிலவற்றில் ஆசைப்பட்டு கட்டுப்படுத்த முடியாமல் தின்று விடுகிறேன். |
| ராம் | : | கட்டிய மனைவியை தவிர மற்ற பெண்களை தாயாகவும், தங்கையாகவும் பார்க்க வேண்டும் என நீ விரும்புகிறாய். ஆனால் இதற்கு உன் மனம் உடன்படுகிறதா ? |
| ராஜா | : | உண்மையை கூறினால் உடன்படவில்லை என்று தான் கூற வேண்டும். காமத்தை மனதளவில் கட்டுப்படுத்த முடியாமல் பலரையும் தவறாகவே பார்க்கிறேன். |
| ராம் | : | உன் மகன் மது உட்பட அனைத்து தீய பழக்கங்களுக்கு அடிமையாகி உள்ளான் என்றும் அதற்கு காரணம் அவன் கேட்கும் போதெல்லாம் நீ பணத்தை அவனுக்கு தந்ததால் தான் என்றும் கூறப்படுகிறதே உண்மைதானா ? |
| ராஜா | : | உண்மை தான். பணத்தை கொடுத்து நான் தான் அவனை கெடுக்கிறேன் என தெரிந்தாலும் அவன் கேட்கும்போது என் மனம் பாசத்தால் உந்தப்பட்டு கொடுத்து விடுகிறேன். என்ன செய்வது ? |
| ராம் | : | தினமும் உடற்பயிற்சி செய்தால் உனக்கு நலம் என தெரிந்தும் ஏன் |

| | | |
|---|---|---|
| | | செய்வதில்லை ? |
| ராஜா | : | தினமும் செய்ய வேண்டும் என்றே நினைக்கிறேன். ஆனால் என் மனம் சோம்பேரித்தனத்தை முனன்னிருத்தி அதையும் தடுத்து விடுகிறது. சரி போதும் போதும் இனியும் கேள்விகள் வேண்டாம் என் மனம் சற்று கோனலாகத்தான் இருக்கிறது என்று ஒப்புக் கொள்கிறேன். நீ நேரிடையாக விசயத்துக்கு வா. |
| ராம் | : | மதிப்பு மரியாதை விசயத்திற்கே வருகிறேன். மதிப்பு, மதிப்பு, மதித்தால் தான் மகிழ்ச்சி என கூறினாயே முதலில் உன்னை நீ மதிக்கிறாயா ? |
| ராஜா | : | என்னை நான் மதிப்பதா ? கேள்வி புரியவில்லையே. |
| ராம் | : | அதாவது உன் மனம் உன்னை மதிக்கிறதா ? எனக் கேட்டேன். |
| ராஜா | : | ஓகோ! இதற்காகத்தான் என் மனதைப் பற்றி இத்தனை கேள்விகள் கேட்டாயா ? என் மனம் என்னை எங்கே மதிக்கிறது ? என்னை சட்டையே செய்வதில்லையே. |
| ராம் | : | உன்னை நீயே மதிக்கவில்லை. ஆனால் எல்லோரும் உன்னை மதிக்க வேண்டும் என நினைத்தாய். இதைத்தான் பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர். தனக்கு தானே, நண்பன், தனக்கு தானே பகைவன் என்றும் மேலும் தன்வசப்பட்ட மனம் கொண்டவன் தனக்கு நண்பனாகவும், தன்வசமிழந்த மனம் கொண்டவன் தனக்கு தானே பகைவனாகவும் செயல்படுகிறான் என்றும் கூறுகிறார். அதாவது உன்னை துக்கப்படுத்துவதற்கு வெளியில் இருந்து எந்த சக்தியும் தேவையில்லை என்றும் உனக்கு நீயே பகைவன் ஆதலால் உன்னை துக்கப்படுத்துவதற்கு நீ ஒருவனே போதும் என்கிறார். சரிதானா ? |
| ராஜா | : | மதிப்பு மரியாதை என்பதை புரிந்து கொள்ளாமல் நான்குபேர் மதிக்க வேண்டும் எனக் கருதி எனக்கு நானே துன்பம் இழைத்துக் கொண்டேன். மேலும் என்னுடைய பல துக்கங்களுக்கும் காரணம் என் மனம் என் வசத்தில் இல்லாதது தான் என்று பார்க்கும்போது கிருஷ்ணர் கூறுவது உண்மைதான். |
| ராம் | : | ஒருவன் தனக்கு தானே துன்பம் இழைத்துக் கொண்டால் அவன் அறிவாளியா ? அல்லது பைத்தியமா ? |
| ராஜா | : | பைத்தியம் தான். |
| ராம் | : | சரி. இப்போது சொல் உன் சமுகத்தில் உள்ள அனைவருமே தனக்கு தானே நண்பர்களா ? அல்லது தனக்கு தானே பகைவர்களா ? |
| ராஜா | : | எல்லோருமே என்னைப் போல் தனக்கு தானே பகைவர்களாகத்தான் உள்ளார்கள். |
| ராம் | : | அப்படியெனில் அவர்கள் எல்லோரும் பைத்தியம் என்பதை ஒப்புக் கொள்கிறாயா ? |

| | | |
|---|---|---|
| ராஜா | : | அதைத்தான் முன்பே தெளிவாகக் கூறிவிட்டாயே. |
| ராம் | : | ஆனால் நான் கூறியதை உன் மனம் ஒப்பவில்லை எனக் கூறினாய். அதனால் தான் அதாவது, ஓர் பைத்தியகார ஆஸ்பத்திரி வளாகத்தில் இருக்கும் ஒரு பைத்தியம் தன்னை மற்ற பைத்தியங்கள் புகழவேண்டும் என நினைத்து தன்னையே பைத்தியகாரத்தனமாக துன்புறுத்திக் கொண்டிருப்பதை உன் மனம் அப்போது ஏற்றுக் கொள்ளவில்லை என நீ கூறியதால் இவ்வளவா விரிவாக விளக்க வேண்டியது அவசியமாகிவிட்டது. |
| ராஜா | : | ராம். நீ இதுவரை கூறிய உண்மைகளை அனைத்தையும் தெரிந்து கொண்டேன். இனி என் வாழ்வில் விரைவிலேயே மதிப்பு, மரியாதை விசயத்தில் உண்மையை உள்ளவாறு புரிந்து கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்பதை கூறு.. |
| ராம் | : | முதலில் உன்னை நீ மதிக்க வேண்டும். அதாவது உன் மனம் உனக்கு வசப்படவேண்டும் இதற்காக நீ செய்ய வேண்டியவை வருமாறு.<br><br>மனப்பூவர்வமாக கீழவரும் எண்ணத்தை அழுத்தமாக மனதில் பதிக்க வேண்டும்.<br><br>1. உலகில் உள்ள அத்தனை பேரும் பைத்தியங்களே. (ஞானிகளை தவிர) அதில் நானும் ஒரு பைத்தியமே. ஆனால் ஒரு வித்தியாசம், நான் பைத்தியம் என்பதை நானறிவேன். ஆனால் உலகில் உள்ள மற்ற பைத்தியங்கள் தங்களை அறிவாளிகள் என நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அனைவரையும்விட நான் ஒரு படி உயர்ந்திருப்பதால் இவர்களின் மதிப்பும் மரியாதையும் கடுகளவும் எனக்கு தேவையில்லை.<br><br>இந்த எண்ணத்தை திரும்ப திரும்ப மனதில் கூறி உரு ஏற்றவேண்டும்.<br><br>2. ஒரு யானை தன் தலையில் மண்ணை வாரி போட்டுக் கொண்டே, அதே நேரத்தில் ஊரில் உள்ள எல்லோரும் என்னை சுத்தப்படுத்த வேண்டும் என எதிர்பார்த்தால், அது எவ்வளவு அறிவீனமோ அதுபோலவே உன்னை நீ மதிக்காமல் மற்றவர் உன்னை மதிக்க வேண்டும் என எதிர்ப்பார்ப்பது. எனவே யாராவது உன்னை புகழ்நதால் மனதில் என்னை நான் மதிக்காத வரையில் ( மனம் வசப்படாத வரையில்) உலகில் உள்ள அத்தனை பேரும் என்னை மதித்து மரியாதை செய்தாலும் அதனால் ஒரு பிரயோசனமும் இல்லை என்ற எண்ணத்தை பதிக்க வேண்டும்) அல்லது நீயே உனக்குள் சொல்லி புரியவைக்க வேண்டும்.<br><br>3. யாரேனும் உன்னை இகழ்ந்து பேசினால் உதாரணமாக உன்னை ஒரு பைத்தியம் என திட்டினால், ‘‘உன் மனதில் நான் பைத்தியம் என்றுதான் எனக்கு ஏற்கனவே தெரியும். ஆதலால் பைத்தியம் தெளிவதற்கான முயற்சிகளை செய்து வருகிறேன். ஆனால் |

| | | |
|---|---|---|
| | | இவர்கள் பாவம், என்னை பைத்தியம் என்று அறிநதவர்கள் இன்னும் தாங்கள் பைத்தியம் என்று அறியாமல் இருக்கிறார்களே'' என்று நினைத்தால் அவர்கள் மீது உனக்கு பரிதாபம் உண்டாகுமே தவிர கோபமோ, வருத்தமோ, பொறாமையோ ஏற்படாது.<br><br>4. மதித்தால் தானே மகிழ்ச்சி. ஆம். உண்மைதான் உன்னை நீ மதித்தால் தான் மகிழ்ச்சி. அதாவது உன் மனம் உன்னை மதித்து உனக்கு வசப்பட்டு ஒத்துழைத்தால் மட்டுமே மகிழ்ச்சி ஏற்படும். இங்கு முக்கியமாக நீ கவனத்தில் கொள்ள வேண்டியது யாதெனில் உன் மனதை வெற்றி கொள்வது என்பது முற்றிலும் உன் கட்டுப்பாட்டில் உள்ள விசயம். முயன்றால் சாத்தியமாகும். ஊரில் உள்ள மற்றவர்களின் புகழ்ச்சியால் உனக்கு மகிழ்ச்சி ஏற்படாது என்பது மட்டுமல்லாமல் முற்றிலும் உனது கட்டுப்பாட்டில் இல்லாத மற்றும் சாத்தியமே இல்லாத விசயம் என்பதை உணர வேண்டும். உதாரணமாக நீ புகை பிடிக்கும் பழக்கமுடைவர்களுடன் பழகும்போது நீயும் புகைபிடித்தால் தான் உன்னை மதிப்பார்கள் இல்லையேல் அனுபவிக்க தெரியாதவன் என்று கிண்டல் செய்வார்கள். அதே வேளையில் புகைபிடிக்கும் பழக்கமல் இல்லாதவர்கள், நீ புகைபிடித்தால் உன்னை மதிக்காமல் வெறுக்கவே செய்வார்கள். இந்நிலையில் எல்லோரிடமும் மதிப்பை பெறுபவதற்காக உன்னால் என்ன செய்ய முடியும் ?<br><br>5. எல்லோரும் பைத்தியம் நானும் பைத்தியம் என்பதை நன்கு நினைவில் கொண்டால் நீ பிச்சைக்காரன் முதல் கோடீஸ்வரன் வரை சமமாகவே பார்ப்பாய். பார்க்க வேண்டும். அவ்வாறின்றி இந்த உண்மையை மறந்தால், ஒரு சிலரை நீயும் அவமதிப்பாய் பின வேறு சிலரால் நீ அவமதிக்கப்பட்டு வருந்துவாய். |

மேலும் அறிவாளிகள் மதிப்பு மரியாதை விசயத்தில் எத்தகைய மனப்பான்மை கொண்டிருப்பார்கள் என்பதை ஞானத்தேவர் ஞாநேச்வரீ என்ற தன்னுடைய கீதை விளக்கவுரையில் கீழ்வருமாறு கூறுகிறார்.

1) ஞானம் உள்ளவனுக்கு, தான் எதையும் சாதித்து வைக்கத் திறமையுள்ளவனா யிருக்கை, என்பது ருசிக்காது, இதரர்களால் கொண்டாடப்படுவது அவனுக்கு தாங்க முடியாத சுமையாய்த் தோன்றும். அவனிடத்தில் உண்மையாய் இருக்கும் ஓர் பெருமையை எடுத்து வர்ணித்தாலும், அவனே ஓர் பெருமை உள்ளவனாய் மதித்தாலும், அவனுக்கு ஓர் பெருமை ஏற்படுடவதாயிருந்தாலும், வேடனால் தகைக்கப்பட்டமானைப் போலும், வேகமான பெருவெள்ளத்தில் விழுந்து கையால் நீந்திப்போகிறவன் பெருந்த சுழலில் அகப்பட்டுப் போனாற்போலும், — அவன் திகைத்துப்போய், சன்மானத்தைக் கண்டு சங்கடப்பட்டு, எவ்விதமான பெருமையும் தன்னிடம் வந்து சேர ஒட்டான், பூஜ்யதை என்பது தன் கண் முன் வா, அவன் சம்மதிக்கமாட்டான்: தன் கீர்த்தி (புகழ்) தன் காதிற்பட சகியான் நானின்னானென்றே உலகதந்தாரறியக்கூடாதென்றிருப்பான்.. அப்படியான பின், அவனுக்கு சத்காரங்கள்

செய்து, அவனைப் பிறர் ஆதரவுடன் உபசரிப்பது என்பது, எப்படி நேரும் ? அவனுக்கு நமஸ்காரம் செய்யப்போனால், அதைக் கண்டு அவன் மரணமே நேரிட்டாற்போலும் நடுங்குவான், அவன் ப்ருஹஸ் பதிக்கு சமானமாய் ஸர்வஞ்ஞனாய்யிருந்து தனக்குப் பெருமை ஏற்படுமென்று பயந்து, பைத்யக்காரர்களோடு பைத்யக்காரனாய்க் கிடந்தொழிவான், அவன் தன் புத்தி சாதுர்யத்தை மறைத்து வைத்து, பெருமையை நாசம் செய்து கொண்டு, மிக்கப் பிரியத்துடன் பைத்யக்கார வேஷம் பூண்டு திரிவான், உலகத்தில் பெருமை அடைவதைக் கண்டு நடுங்கி, சாஸ்திருஞாநவிஷயத்தில் வெறுப்படைந்து, ஒன்றும் செய்யாமல் விழுந்து கிடப்பதே அவனுக்கு ருசித்திருக்கும். உலகத்தார் தன்னை அவமானப்படுத்தி வைத்தலும், உறமுறையார் தன்னை ஒதுக்கிவைத்தலும், இவ்விதப்பட்ட மற்ற மானக்கேடுகளும், தனக்குக் கிடைக்க வேண்டுமென்றே, அவன் மிக்க ஆசைப்படுவான்: மிக்கத் தாழ்மை பூண்டவனாய், தான் எதைச் செய்தால், தனக்கு உலகத்தார் மதிப்பில் குறைவு ஏற்படுமோ, அதையே பெரும்பாலும் செய்து கொண்டிருப்பான், அவன் உயிர்திருக்கிறானோ இல்லையோ என்றும், அவன் நடந்து போகிறானோ, காற்று தான், அவனை அடித்துக் கொண்டு போகிறதோ என்றும், உலகத்தார் ஸந்தேஹிக்கும்படி, உலகில் இருந்து வாழ்நாளை ஒழித்து விடவேண்டு மென்று, ஆசைப்பட்டவனாய், அவன் இருப்பான். தன் இருப்பே உலகத்ததாருக்குத் தெரியமாற் போகவேண்டு மென்றும்,–தன் பெயரும் உருவமும் ஒருவர் மனதிலும் நிலைபெறாமல் போகவேண்டு மென்றும், –என்னைக் கண்டால், ஏதேனும் ஓர் ப்ராணி பயப்படுமாகையால், நான் ஸதா மறைந்து கிடந்தே காலந்தள்ளுவேன், என்று ஓர் ப்ரதிஞ்ஞை செய்துகொண்டவனைப் போல், மனுஷ்ய ஸஞ்சார மில்லாத இடத்தில் வசிக்க வேண்டும் என்றும், –எண்ணி ஏகாத்தத்தையே அவன் தேடித்திரிவான், காற்றே அவன் கூட்டாளி ஆகும்: அவன் ஆகாசத்தோடு ஸம்பாஷனை செய்வான்: மரங்கள் அவன் உயிர்த தோழர்கள் ஆகும். இன்னும் வளர்ப்பதென் ? இவ்வகை லஷணங்களை எவனிடத்திற் பார்ப்பாயோ, அவன் அறிவு படைத்தவனென்றும், அவனே ஞானம் படுத்திருக்கும் படுக்கை யாவானென்று அறிந்துகொள். மேலும்

2) எப்படி லோபியானவன், தன் உயிர் போவதாயிருந்தாலும், தான் புதைத்து வைத்திருக்கும் பொருளை பிறருக்குக் காண்பிக்கானோ, அப்படியே ஞானமடைந்தவன், தனக்கு ப்ராணன் போவதாயிருந்தாலும், தான் செய்தநான ஓர் நன்மையை பிறருக்கு வெளிப்படுத்தி வைக்கமாட்டான், உதைக்கும் ஸ்வபாவமுள்ள துஷ்டமாடு, தான் சுரந்த பாலை எக்கிக் கொள்வது போலும், திருடர்கள் ஸஞ்சரிக்கும் காட்டில் சிக்கிக் கொண்ட பணக்காரன், தான் செல்வம்படைத்தவன்

என்பதை, மறைத்துக் கொள்வதும், பயிரிடுகிறவன் தான் விதைத்த விதைகளை முடி வைப்பது போலும், தன்னிடத்தினின்று ஏற்பட்ட தானங்களையும் மற்ற புண்யங்களையும், அவன் மறைத்து வைப்பான். உலகத்தாருக்கு ரஞ்சகமாக நடந்துகொள்ள வேண்டுமென்றசைப்படான்: தான் செய்த நன்மைகளை, தன் நாக்கென்னும் த்வஜத்தில் எழுதி வைத்து ப்ரகடனம் செய்யான்: தான் செய்த பரோபகாரங்களை எடுத்துப் பேசான்: தான் கற்ற கலைகளைப் பிறரறிய வேண்டுமென்று விரும்பான்: தான் தேடிக்கொண்ட நன்மைகளை கீர்த்திக் காசைப்பட்டு விற்கமாட்டான். அவன் தன் சரீரத்தைப் போஷிக்கும (காக்கும்) விஷயத்தில், பிறருக்கு மஹர க்ருபனாய்த் (கஞ்சனாய்) தோன்றி, தர்ம விஷயங்களில் கணக்குப் பார்க்காமல் தன் பொருளைச் செலவிடுவான். வீட்டில் அன்ன வஸ்திரத்துக்கு மிக்க ஸங்கடமாயிருக்கும்: அவன் தேஹம் மிக்க இளைத்துப்போயிருக்கும்: ஆனால் பிறருக்கு தானம் செய்யும் விஷயத்தில் கல்பதருவோடு போட்டி போடுவான், வளர்திச் சொல்வதென் ? ஸ்வதர்மானுஷ்டானத்திற் சிறந்தவனாய், தக்க ஸமயங்களில் உதாரணனாய், ஆத்ம ஞான விசாரத்தில் கைதீர்ந்தவனாய் இருந்துகொண்டு, உலகத்ததாருக்கு பைத்யக்காரனாயக் காணப்படுவான். வாழை மேற்பார்வைக்கு மிக்க மெல்லியதாய்த் தோன்றி, ரஸமுள்ளதும் புஷ்டியுள்ளதுமான பெருத்த குலையைப் பழுத்துத் தருவதுபோலும், மேகம் மிக்க இலேசாய், காற்றின் முன் பறப்பதாய் இருந்தும், மிக்க கனத்த தாரைகளைப் பொழிவதுபோலும், மனஸு ஸந்தோஷப்படும்படி ஸம்பூர்ணனாய் இருந்து, வெளிப்பார்வைக்கு கொடுமையான தாரித்ரியத்துக்கு வாஸஸ்தானமாய், அவன் தோன்றுவான். இப்படிப்பட்ட லக்ஷணங்களின் நினைவே அதம்பித்வம் ஆகும்: இது எவனிடத்தில் காணப்படுமோ, அவன் ஞானம் உள்ளவன் ஆவான்.

மேலும் அறிவில்லாதார்களின் மனப்பான்மையை பின்வருமாறு கூறுகிறார்.

1) எவன், பிறர்கள் கொண்டாட வேண்டுமென்று ஆசைப்பட்டு, அவர்களிடத்திலிருந்து பூஜையை எதிர் பார்த்துக்கொண்டு, அப்படி பூஜை கிடைத்த உடனே, ஸந்தோஷமடைந்து, கர்வங் கொண்டு, பெருமை என்னும் மலையின் சிகரத்தின் மேல் ஏறி, அதினின்று இறங்காதவனா யிருப்பானோ, அவனிடத்தில் ஸம்பூரணமான அஞ்ஞானம் குடி கொண்டிருக்கிறது.

2) பஞ்சமர்கள் தங்கள் சாவடிகளை அரசின் இலைகளால் தோரணம் கட்டி அலங்கரித்தல் போலும், தாபங்கள் செய்த தர்மங்களை, எல்லார் காதிலும் படும்படி

தங்கள் வாக்காலேயே கொண்டாடி, கோவில்களில் குப்பையைப் பெருக்கித்தள்ள கட்டி வைத்திருக்கப்பட்ட துடப்பத்தைப் போலும், பிறர்கள் நிந்தையைச் செய்து, அவர்களை சுத்தப்படுத்தி வைக்கிறவனாய், –தன்னுடைய வித்யையை (கல்வியை) ப்ரகடனம் பண்ணிக்கொண்டு, தான் செய்த புண்யங்களை எடுத்துக் கூறி, கேவலம் ப்ரதிஷ்டைக்காக அவற்றைச் செலவிடுகிறவனாய், – இதரர்களுக்கு செய்ய வேண்டிய பூஜையைச் செய்யாதவனாய், –எவனிருப்பானோ, அவன் அஞ்ஞானத்தால் நிறைந்திருக்கும் கனியே ஆவான்.

3) காற்று நிறைந்த மாத்ரத்தில் உப்பி, அது வெளிப்பட்ட மாத்ரத்தில் சுருங்கிப் போகும், துருத்தியை (பலூனை) போலும், லாப நஷ்டங்களால் வீங்கி வற்றிப் போகிறவனாய், –பெருங்காற்றின் சுழலில் சிக்கிப் போன தூசி ஆகாசம் வரைக்கும் ஏறி விடுவது போலும், பிறர்தன்னைப் புகழக்கேட்டு ஸந்தோஷத்தால் மதம்கொண்டு, தன் நிந்தனை கொஞ்சம் காதில் பட்ட மாத்திரத்தில் நிந்தை செய்கிறவன் சிந்டை பிடித்துக் கொள்கிறவனாய், –கொஞ்சம் நீரின் ஸம்பந்தத்தால் இளகி உருவிழந்து, கொஞ்சம் காற்று வீசினால் உலர்ந்து பொடியாய் உதிர்ந்து போகும் களிமண்ணைப்போலும், மானாஅவமானங்களின் சிறு அலைகளைக் கூடத் தாங்கி நிற்காதவனாய், –எவன் இருப்பனோ, அவனிடத்தில் அஞ்ஞானம் ஓர் குறைவுமின்றி குடி கொண்டிருக்கிறது. என்று ஞானத்தேவர் சொல்கிறார்.

தன் வசப்பட்ட மனதுடன் கூடியவர்களைப் குறித்து குதப்பைச் சித்தர் கீழ்வருமாறு கூறுகிறார்.

1) வெட்டவெளி தன்னை மெய்யென்று இருப்போர்க்கு
பட்டயம் எதுக்கடி குதம்பாய் பட்டயம் எதுக்கடி

2) நித்திரை கெட்டு நினைவோடு இருப்போர்க்கு
முத்திரை எதுக்கடி குதம்பாய் முத்திரை எதுக்கடி.

3) அல்லலை நீக்கி அறிவோடு இருப்போர்க்கு
பல்லாக்கு எதுக்கடி குதம்பாய் பல்லாக்கு எதுக்கடி.

4) மார்த்தானை வென்று மலைமேல் இருப்போர்க்கு
பூத்தாணம் எதுக்கடி குதம்பாய் பூத்தாணம் எதுக்கடி.

(மார்த்தானை – மனதை)

5) காலனை வென்ற கருத்தறி வாளருக்கு
கோலங்கள் எதுக்கடி குதம்பாய் கோலங்கள் எதுக்கடி.

மதிப்பு மரியதைப் பற்றி புரிந்து கொள்ளாதவரைப் பார்த்து பட்டினத்தர் கூறுகிறார்.

செல்வரைப் பின்சென்று உபசாரம் பேசித் தினம்தினம் பல்லினைக் காட்டி பரிதவியாமல் பரமானந்தத்தின் எல்லையில் புகுந்து நல் ஏகாந்தமாய் எனக்காம் இடத்தே அல்லலற்று என்றிருப்பேன் ஆலநிழலில் அரும்பொருளே! என்கிறார்

இறுதியாக, நீ செய்யவேண்டியதெல்லாம் மீண்டும் மீண்டும் இதுவரை நான் கூறியதை சிந்தனை செய்து, ஞானேச்சுவரி, சித்தர் பாடல்கள், கீதை ஆகியவற்றை படித்து உண்மையை உள்ளவாறு உணர்ந்து கொள்வதே ஆகும்.